"மழைநீர் சேமிப்போம்" "பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் "

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 20.09.2021.

**நகர்மன்ற சாதாரணக் கூட்ட அழைப்பிதழ்**

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 பிலவ வருடம், புரட்டாசி மாதம் 04-ம் நாள் 20.09.2021-ம் தேதி திங்கள் கிழமை மாலை 04.00 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெறும்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி - அல்லிநகரம் நகராட்சி

**பொருள் 01 :-**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 20027 / 2021 / தி2, நாள். 08.09.2021-ன் படி, தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 14 பெரியகுளம் மெயின் ரோட்டில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டுவதற்கான பணியினை ரூ.90.00 இலட்சத்தில் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணியினை மேற்கொள்ளுவதற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறுவதற்கான உரிய கருத்துருவை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால், மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.90.00 இலட்சத்தினை முழுமானியமாக நிதி ஒதுக்கீடு செய்து வழங்க கோரியும், மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 3374 / 2018 / இ1**

**தீர்மான எண் :** 1980
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 02 :-</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 35871 / 2014 / இ1, நாள். 08.09.2021-ன் படி, தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மொத்தம் உள்ள 3325 தெருவிளக்குகளில், ஏற்கனவே 239 தெருவிளக்குகள் ஒளிர் உமிழ் விளக்குகளாக ( LED ) மாற்றப்பட்டுள்ளது. மீதம் உள்ள 3086 தெருவிளக்குகளை ஒளிர் உமிழ் விளக்குகளாக ( LED ) மாற்றுவதற்கும், புதியதாக 115 ஒளிர் உமிழ் விளக்குகள் ( LED ) அமைப்பதற்க்கான பணியினை ரூ. 550.00 இலட்சத்தில் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணியினை மேற்கொள்ளுவதற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறுவதற்கான உரிய கருத்துருவை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால், மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.550.00 இலட்சத்தினை முழுமானியமாக நிதி ஒதுக்கீடு செய்து வழங்க கோரியும், மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 3374 / 2018 / இ1**

**தீர்மான எண் :** 1981
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 03 :-</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 20028 / 2021 / தி2, நாள். 08.09.2021-ன் படி, தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 23 ஜவஹர் மெயின் ரோட்டில் உள்ள காமராஜ் பூங்காவினை அபிவிருத்தி பணிகள் செய்யும் பணியினை ரூ. 49.80 இலட்சத்தில் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணியினை மேற்கொள்ளுவதற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறுவதற்கான உரிய கருத்துருவை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால், மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.49.80 இலட்சத்தினை முழுமானியமாக நிதி ஒதுக்கீடு செய்து வழங்க கோரியும், மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 3374 / 2018 / இ1**

**தீர்மான எண் :** 1982
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 04 :-

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 20027 / 2021 / தி2, நாள். 08.09.2021-ன் படி, தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 14 பெரியகுளம் மெயின் ரோட்டில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டுவதற்கான பணியினை ரூ.90.00 இலட்சத்தில் மேற்கொள்ள இடம் தேர்வு செய்து மதிப்பீடு தயார் செய்யயப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தில் தற்போது புதியதாக நகராட்சி ஆணையாளர் குடியிருப்பு கட்டிடம் கட்டும் பணியினை ரூ.48.00 இலட்சத்தில் மேற்கொள்ள இந்நகர் மன்றத்தீர்மான எண். 1437, நாள். 30.03.2020- ன்படி தீர்மானிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டு பணிகள் மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி இடத்தில் பொதுமக்கள் அதிக அளவில் பயன்பெறும் வகையில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதால், புதியதாக ஆணையாளர் குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள மாற்று இடமான இந்நகராட்சிக்கு சொந்தமான பி.சி.பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் காலியாக உள்ள இடத்தில் கட்டுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ ) மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண் : 3374 / 2018 / இ1**

**தீர்மான எண் :** 1983
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 05 :-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பொம்மையகவுண்டன் பட்டியில் நகராட்சி ஆணையாளர் மற்றும் பணியாளர்கள் குடியிருப்புகள் உள்ளது. மேற்படி நகராட்சி ஆணையாளர் குடியிருப்பு நகரின் முக்கிய சாலையில் உள்ளதால் பொதுமக்கள் நடமாட்டம் மற்றும் வாகன போக்குவரத்து அதிகமாக இருப்பதால் நகராட்சி ஆணையாளர் குடியிருப்பில் பாதுகாப்பு கருதி, குடியிருப்பு வளாகத்தில் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுவதற்கு 07.09.2021-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | R.A. Jeyasudarssan & Co., Shop No 68, West Market. Periyakulam road, Theni - 625 531. | 36094.00 | 0.07 %அதிகம் |
| 2 | Mayuraa Home Appliance, 262 - 1 / A, Subban street, Sri Ram Theatre Complex, Theni - 625 531. | 36067.00 | 0.01 % குறைவு |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவாக விலை விகிதம் கோரிய **Mayuraa Home Appliance, Theni** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 2221 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 1984
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 06 :-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான, நகராட்சி அலுவலகம், உப்பார்பட்டி உரக்கிடங்கு, எரிவாயு தகன மேடை மயானக்கூடம் ஆகிய இடங்களில் CCTV கேமராக்கள்

பொருத்துவதற்கு, மற்றும் நகராட்சி அலுவலகத்தில் Mini Meeting Hall - ல் Video Conference -க்கான அமைப்புகள் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளுவதற்கு 09.09.2021-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | R.A. Jeyasudarssan & Co.,<br>Shop No 68, West Market.<br>Periyakulam road,<br>Theni - 625 531. | 331203.00 | 0.06 %அதிகம் |
| 2 | Mayuraa Home Appliance,<br>262 - 1 / A, Subban street,<br>Sri Ram Theatre Complex,<br>Theni - 625 531. | 330985.00 | 0.01 % குறைவு |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவாக விலை விகிதம் கோரிய **Mayuraa Home Appliance, Theni** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1292 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 1985
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 07 :-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 8 - வது வார்டு வீரப்ப அய்யனார் கோவில் செல்லும் சாலையில், சங்கிலி கருப்பன் கோவில் அருகில், சாலையின் குறுக்கே உள்ள சிறுபாலம் மிகவும் தாழ்வாக இருப்பதால் கிழக்குப்பகுதியில் இருந்து வெளியேறும் மழைநீர் சிறுபாலத்தின் வழியே செல்ல இயலாமல் சாலையின் வழியாக வெளியேறி கொண்டு வருவதால் சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. அதனை தவிர்க்கும் வகையில் மேற்படி சிறுபாலத்தை முற்றிலுமாக அகற்றி விட்டு அதே இடத்தில் ( உயர்த்தி ) புதியதாக சிறுபாலம் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளுவதற்கு 01.09.2021-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி

மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.த.தவமணி, நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 192252.50 | 0.61 % குறைவு |
| 2 | திரு.கே.கொண்டசாமி, நகராட்சி ஒப்பந்தாரர், தேனி | 192942.53 | 0.26 % குறைவு |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவாக விலை விகிதம் கோரிய **திருமதி.த.தவமணி** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1982 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 1986
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 08 :-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 4 - வது வார்டு பகுதியில் உள்ள சின்னக்குளம் கண்மாய் மாசுபடுத்துதலை தடுக்க சுற்றுவேலி அமைத்து, இரும்பு கேட் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளுவதற்கு 01.09.2021-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.த.தவமணி, நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 42251.77 | 2.74 % குறைவு |
| 2 | திரு.கே.கொண்டசாமி, நகராட்சி ஒப்பந்தாரர், தேனி | 42776.27 | 1.53 % குறைவு |

<u>அலுவலகக்குறிப்பு</u>

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவாக விலை விகிதம் கோரிய **திருமதி.த.தவமணி** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 2142 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 1987
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 09 :-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2020 - 2021 ம் ஆண்டின் 15 வது மாநில மானிய நிதிக்குழு திட்டத்தின் கீழ் குடிநீர் பணி, மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவிலான தமிழ் தினசரி நாளிதழில்களில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனத்தில் இருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| **வ. எண்.** | **நாளிதழ் மற்றும் பட்டியல் தொகை வழங்கப்பட்ட வேண்டிய நிறுவனத்தின் விபரம்** | **செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம்** | **தொகை ( ரூ)** |
|---|---|---|---|
| 1 | உள்ளாட்சி சாரல் நாளிதழ், பட்டியல் எண். 005, நாள். 29.08.2021 | வெளியீட்டு ஆணை எண். 135 / ஒப்பந்தப்புள்ளி / விளம்பரம் / 2021 , நாள். 28.08.2021 | 21000.00 |

மேற்கண்ட தொகை ரூ. 21000/-ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 163 / 2018 / இ1

**தீர்மான எண் :** 1988
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 10 :-</u>

தேனி-அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொரோனா பெருந்தொற்று தடுப்பூசி மாபெரும் முகாம்கள் செயல்படுத்துவது குறித்து 07.09.2021-ல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் தடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சி பகுதியில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் இரண்டு உட்பட பதினெட்டு (18) இடங்களில் 12.09.2021 அன்று கொரோனா தடுப்பூசி சிப்பு முகாம் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக தினசரி ஆட்டோ மூலம் இந்நகராட்சி பகுதிகளில் முழுவதும் ஒலிபெருக்கி மூலம் அறிவிபு செய்திடவும் மேற்கண்ட 18 இடங்களிலும் விழிப்புணர்வு ப்ளக்ஸ், நகரின் முக்கிய பகுதிகளில் கொரோனா தடுப்பூசி முகாம்கள் நடைபெறும் இடங்கள் குறித்து விளம்பர பேனர்கள் வைத்திடவும், முகாம்கள் நடைபெறும் நாளன்று அனைத்து பணியாளர்களுக்கும் உணவுகள் வழங்கவும் இதர செலவினத்திற்காகவும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. மேற்கண்ட பணிகள் பொது சுகாதார நிர்வாக நலன் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1358 / 2020 /எச்1**

**தீர்மான எண் :** 1989
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 11 :-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 15-வது மாநில நிதிக் குழுத் திட்டம் 2020 - 2021 - ம் ஆண்டில் ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடையில் ஏற்படும் அடைப்புகளை சுத்தம் செய்வதற்காக 1 எண்ணம் ரோபோடிக் இயந்திரம் வாங்கும் பணிக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண். 1672, நாள். 18.01.2021 - ன்படி தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ளும் போது இந்நகராட்சியில் பாதாளச் சாக்கடை திட்டப் பணிக்கு தற்போது ஆள் இறங்கு தொட்டிகளில் உள்ள மண்ணை அகற்றுவதற்கு 2 எண்ணம் டி - சில்டிங் வாகனம் பயன்படுத்தப்பட்டு வருவதால், நகரின் பாதாளச்சாக்கடைத்

திட்டம் நிறைவேற்றப்படாத பகுதிகளில் உள்ள வீடுகளில் செட்டிக் டேங்குகள் சுத்தம் செய்யவும், ஆள் இறங்கு தொட்டிகளில் அடைப்புகளின் போது தேங்கி நிற்கும் கழிவுநீரை அகற்றுவதற்கு 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 1 எண்ணம் ( சல்லேஜ் ) கழிவு நீர் அகற்றும் வாகனம் ரூ.36.00/- இலட்சம் மதிப்பீட்டில் ( ரோபோடிக் இயந்திரம் வாங்கும் பணிக்கு பதிலாக மாற்றுப் பணியாக ) வாங்குவதற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண். 1978, நாள். 31.08.2021 - ன்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 18.09.2021-ம் தேதியன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரையில் தேனி - அல்லிநகரம் நகராட்சியில் ஏற்கனவே உள்ள 3 நுண்ணுயிர் உரக்கலவைக் கூடத்துடன் கூடுதலாக 1 எண்ணம் நுண்ணுயிர் உரக்கலவைக்கூடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

அதன்படி தற்போது இந்நகரில் தினசரி உருவாகும் திடக்கழிவுகளை அறிவியல் முறையில் அகற்றுவதற்கு தேவையான நுண்ணுயிர் உரக்கலவைக் கூடம் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்கும் பொருட்டு கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பகுதியில் நுண்ணுயிர் உரக்கலவைக் கூடம் கட்டும் பணியினை மேற்கொள்ளுவதற்கு நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காணத்தினால், மேற்படி பணியின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு, பணிக்கான செலவினத் தொகை ரூ. 40.00/- இலட்சத்தினை, தற்போது 15-வது மாநில நிதிக் குழுத் திட்டம் 2020 - 2021 - ம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்ட பணியான கழிவுநீர் அகற்றும் வாகனம் புதியதாக ரூ. 36.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கும் பணிக்கு பதிலாக, மாற்றுப் பணியாக ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டில் நுண்ணுயிர் உரக்கலவைக் கூடம் கட்டும் பணி மேற்கொள்ளுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ( ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|
| 1 | வார்டு எண். 14 - ல் உள்ள பழைய உரக்கிடங்கில், நுண்ணுயிர் உரக்கலவைக் கூடம் கட்டும் பணி | 40.00 |

**அலுவலகக்குறிப்பு** :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்கு உரிய செலவினத்தை 15-வது மாநில நிதிக் குழுத் திட்டம் 2020 - 2021 - ம் ஆண்டில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**ந.க.எண். 224 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 1990
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 12 :-</u>

**குடிநீர் நிதி -2021-2022 ம்** ஆண்டு நிதியின் கீழ் தேனி - அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளுக்கு குடிநீர் சப்ளை செய்ய தேவையான வால்வு திறக்கும் பணியாளர்கள் ( Valve Oprator ) 18 பேர் சப்ளை செய்தல் பணிக்கு 27.08.2021 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டது.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ** | **கூடுல் / குறைவு** |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | திருமதி. டி. தவமணி<br>நகராட்சி ஒப்பந்தததாரர் | 320000.00 | குறைவு |
| 2. | கே.கொண்டைசாமி | 321000.00 | அதிகம் |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி. டி. தவமணி நகராட்சி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட சப்ளை பணி அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2426 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1991
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 13 :-

**குடிநீர் நிதி -2021-2022 ம்** ஆண்டு நிதியின் கீழ் தேனி - அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 04,10,11, மற்றும் 13 க்குட்பட்ட பகுதிகளுக்கு நகராட்சிக்கு சொந்தமான பொம்மையகவுண்டன்பட்டி குடிநீர் தேக்கத்தொட்டியிலிருந்து புதிதாக பகீர்மானக்குழாய் பதித்தல் பணிக்கு 27.08.2021 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டது.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ** | **கூடுல் / குறைவு** |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | திருமதி. டி. தவமணி<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | 670570.00 | 0.22 % குறைவு |
| 2. | கே.கொண்டைசாமி | 705575.00 | 4.98 % அதிகம் |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.22 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி. டி. தவமணி நகராட்சி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1793 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1992
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 14 :-

**குடிநீர் நிதி -2021-2022 ம்** ஆண்டு நிதியின் கீழ் தேனி - அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 01,03,04, மற்றும் 07 க்குட்பட்ட பகுதிகளுக்கு நகராட்சிக்கு சொந்தமான பாலன்நகர் குடிநீர் தேக்கத்தொட்டியிலிருந்து புதிதாக பகீர்மானக்குழாய் பதித்தல் பணிக்கு 27.08.2021 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டது.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ** | **கூடுல் / குறைவு** |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | திருமதி. டி. தவமணி<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | 664670.00 | 0.61 % குறைவு |

| | | | |
|---|---|---|---|
| 2. | கே.கொண்டைசாமி | 719650.00 | 7.60 % அதிகம் |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.61 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி. டி. தவமணி நகராட்சி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1792/ 2021/ இ2**

**தீர்மான எண் :** 1993
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 15 :-</u>

**குடிநீர் நிதி -2021-2022 ம்** ஆண்டு நிதியின் கீழ் தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான வைகை அணையின் புதிய குடிநீர் திட்டத்தில் வைகை ஆற்றில் கட்டப்பட்டுள்ள இயல் நீரேற்று நிலையம் ( Raw Water ) குருவிஅம்மாள்புரம் பகுதியில் கட்டப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ( Water Treatment Plant ) ஆகியவற்றின் மின் இணைப்பு எண். 059094760090 மற்றும் 059094760091 ன் மின்மோட்டார்களுக்கு புதிய Capacitor சப்ளை செய்து பொருத்துதல் பணிக்கு 27.08.2021 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | திருமதி. டி. தவமணி<br>நகராட்சி ஒப்பந்தததாரர் | 464824.00 | 0.07 % குறைவு |
| 2. | கே.கொண்டைசாமி | 471200.00 | 1.29 % அதிகம் |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.07 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி. டி. தவமணி நகராட்சி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1795 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1994
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 16 :-</u>**

**குடிநீர் நிதி -2021-2022 ம்** ஆண்டு நிதியின் கீழ் தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான வைகை அணை புதிய குடிநீர் திட்டத்தின் தலைமைநீரேற்று நிலையத்தில் உள்ள மோட்டார் பம்புகளில் உள்ள Intake Well களில் ஏற்படும் பழுதுகளை சீர்செய்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு 27.08.2021 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டது.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ** | **கூடுதல் / குறைவு** |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | திருமதி. டி. தவமணி<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | 635526.00 | 0.04 % குறைவு |
| 2. | கே.கொண்டைசாமி | 639635.00 | 0.60 % அதிகம் |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.04 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி. டி. தவமணி நகராட்சி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1795 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1995
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 17 :-</u>**

**குடிநீர் நிதி -2021-2022 ம்** ஆண்டு நிதியின் கீழ் தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான வைகை அணை புதிய குடிநீர் திட்டத்தின் தலைமைநீரேற்று நிலையத்தில் உள்ள உள்ள மோட்டார்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை சீர்செய்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு 27.08.2021 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுல் / குறைவு |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | திருமதி. டி. தவமணி நகராட்சி ஒப்பந்ததாரர் | 641419.00 | 0.06 % குறைவு |
| 2. | கே.கொண்டைசாமி | 648900.00 | 1.10 % அதிகம் |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.06 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி. டி. தவமணி நகராட்சி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 614 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1996
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 18 :-</u>

**குடிநீர் நிதி -2021-2022 ம்** ஆண்டு நிதியின் கீழ் தேனி - அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.01,02,03,04,06,08,09,10,11,12,13,19,20,26, மற்றும் 28 க்குட்பட்ட பகுதிகளில் ஏற்கெனவே பதிக்கப்பட்டுள்ள குடிநீர் பகீர்மானக்குழாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்பை நீக்குதல் பணிக்கு 27.08.2021 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுல் / குறைவு |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | திருமதி. டி. தவமணி நகராட்சி ஒப்பந்ததாரர் | 505733.00 | 0.22 % குறைவு |
| 2. | கே.கொண்டைசாமி | 515263.00 | 0.1.65 % அதிகம் |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.22 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி. டி. தவமணி நகராட்சி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1794 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1997
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 19 :-</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான என்.ஆர்.டி.நகரில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு நுண்ணுயிர் உரக்கலவைக் கூடம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறை ஆணையின் கடிதம் ந.க.எண். 22866 / 2018 / P3, நாள். 23.08.2018-ம் தேதியில் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டது.

அதன்படி தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல் முறை ஆணையின் கடிதம் ந.க.எண். 18281 / 2017 / DO2, நாள். 29.08.2018-ம் தேதியில் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய திருமதி.த.தவமணி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை இந்நகர்மன்றத் தீர்மான எண். 683, நாள். 03.10.2018 - ன்படி ஏற்று ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒப்பந்ததாரர் மேற்படி இடத்தில் நுண்ணுயிர் உரக்கலவைக் கூடம் கட்டும் பணி மேற்கொண்டு, பணிகள் முடிவடையும் நிலையில் இருக்கும் போது அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மேற்படி பணியை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஆட்சேபணை செய்து வந்தார்கள்.

அதனை தொடர்ந்து அப்பகுதியில் வசிக்கும் முக்கிய பிரமுகர்களை நேரில் அழைத்து பேசி ஆலோசணைக் கூட்டங்கள் நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் மதுரை மற்றும் ஆணையாளரின் தலைமையில் 29.04.2019-ம் தேதியன்றும், 03.06.2019-ம் தேதியன்று ஆணையாளரின் தலைமையிலும், 01.08.2019-ம் தேதியன்று வட்டாட்சியர் மற்றும் ஆணையாளர் அவர்களின் தலைமையிலும் மற்றும் 29.10.2020-ம் தேதியின்று ஆணையாளரின் தலைமையிலும் பல முறை நடைபெற்றும் நாளது தேதி வரை பயன்பாட்டிற்கு கொண்டு வர தொடர்ந்து ஆட்சேபனை செய்து வருகிறார்கள்.

மேற்படி பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரருக்கு நாளது தேதி வரை ரூ.48.68 இலட்சம் பட்டியல் தொகை வழங்கப்பட்டு நீண்ட காலமாக பணிகள் முடிவு பெறாமல் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 18.09.2021-ம் தேதியன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள், நுண்ணுயிர் உரக்கலவைக் கூடம் கட்டும் பணியினை பொதுமக்கள் ஆட்சேபனை செய்து வரும் பட்சத்தில், அதனை திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்கான வளமீட்பு மையமாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், ஏற்கனவே உள்ள 3 நுண்ணுயிர் உரக்கலவைக் கூடத்துடன் கூடுதலாக 1 எண்ணம் நுண்ணுயிர் உரக்கலவைக்கூடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

அதன் அடிப்படையில் தற்போது 15-வது மாநில நிதிக் குழுத் திட்டம் 2020 - 2021 - ன் கீழ் ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 14 - ல் உள்ள பழைய உரக்கிடங்கில், நுண்ணுயிர் உரக்கலவைக் கூடம் கட்டும் பணியினை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு என்.ஆர்.டி நகரில் கட்டப்பட்டு வந்த நுண்ணுயிர் உரக்கலவைக் கூடத்தின் பணியினை அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களால் நாளது தேதி வரை தொடர்ந்து ஆட்சேபணை செய்து வருவதால் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் உத்தரவின்படி வளமீட்பு மையமாக மாற்றம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2868 / 2018 / இ1**

**தீர்மான எண் :** 1998
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 20 :-</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 20028 / 2021 / தி2, நாள். 08.09.2021-ன் படி, தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 23 ஜவஹர் மெயின் ரோட்டில் உள்ள காமராஜ் பூங்காவினை அபிவிருத்தி பணிகள் செய்யும் பணியினை ரூ.49.80 இலட்சத்தில் மேற்கொள்ள இடம் தேர்வு செய்து மதிப்பீடு தயார் செய்யயப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

வழங்கல் ( மா.ந.2 ) துறையின் அரசாணை ( 4ப ) எண். 06, நாள். 03.09.2020 - ன்படி இந்நகராட்சி பொதுநிதியில் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் யோகா மையம் மற்றும் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் திறந்த வெளி உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் பணியினை மேற்கொள்ள இந்நகர் மன்றத்தீர்மான எண். 1669, மற்றும் 1670 நாள். 08.01.2021 - ன்படி தீர்மானிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டு பணிகள் மேற்கொள்ளுவதற்கு 18.01.2021-ம் தேதியில் ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி துவக்கப்படாமல் உள்ளது.

இந்நிலையில் மேற்படி இடத்தில் பொதுமக்கள் அதிக அளவில் பயன்பெறும் வகையில் பூங்கா அபிவிருத்தி செய்யும் பணியினை ரூ. 49.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதால், மாற்று இடத்தில் யோகா மையம், மற்றும் உடற்பயிற்சிச் கூடம் அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2940 / 2020 / இ1**

**தீர்மான எண் :** 1999
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 21 :-</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அலுவலகத்தின் 17.09.2021-ம் தேதிய தொலைப்பேசி செய்தியில் தெரிவித்துள்ளபடி, தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வருவாய் துறைக்கு சொந்தமான கீழ்கண்ட 2 நீர் நிலைகளில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுவதற்கு ரூ. 81.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ( ரூ ) இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண். 08 ( Ward - B, Block - 26, TS No - 5 ) - ல் உள்ள கோபால சமுத்திர கண்மாயில் தூர்வாருதல், கரையை பலப்படுத்துதல், மற்றும் சுற்றுவேலி அமைத்தல் | 50.00 |
| 2 | வார்டு எண். 01 ( TS No - 5 ) ( Old TS No : 755 / 1 ) - ல் உள்ள ஊரணியில் தூர்வாருதல், கரையை பலப்படுத்துதல், மற்றும் சுற்றுவேலி அமைத்தல் | 31.00 |
| | **மொத்தம்** | **81.00** |

மேற்படி பணியினை மேற்கொள்ளுவதற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறுவதற்கான உரிய கருத்துருவை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால், மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான மதிப்பீடு தொகை ரூ. 81.00 இலட்சத்தினை முழுமானியமாக நிதி ஒதுக்கீடு செய்து வழங்க கோரியும், மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 3374 / 2018 / இ1**

**தீர்மான எண் :** 2000
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (மற்றும்)
ஆணையாளர்
தேனி - அல்லிநகரம் நகராட்சி